Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE NO.89/2022**

Deposition of PW1 Witness for Defence

Defence Court

Name :Dhanabakyam Caste:

Husband's Name :Ravi Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 04th July 2023.

**(A1 to A3 are present.)**

**முதல் விசாரணை-**

நான் சென்னை-திருவள்ளூர் சாலையில் அமைந்துள்ள புதுசத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன அசோக்குமார் எனது மகன். எனது கணவர் பெயர் ரவி. எனக்கு மூன்று மகன்கள். மூத்த மகன் பெயர் கார்த்திக், இரண்டாவது மகன் பெயர் அசோக்குமார், மூன்றாவது மகன் பெயர் நவீன். நாங்கள் ஒட்டர் சாதியை சேர்ந்தவர்கள். 12/12/2020 அன்று இரவு 08.30 மணியளவில் நான் எனது கணவர் மற்றும் எங்களின் மூன்று மகன்களும் வீட்டிலிருந்தோம். அப்போது ராஜாவின் மகன் சதீஷ், எங்களது வீட்டிற்கு வந்து அசோக் குமாரை பேசுவதற்காக அழைத்தார். மேற்கூறிய சதீஷும் எனது மகன் அசோக்குமாரும் நண்பர்கள். சதீஷ் எங்களது சமூகத்தை சேர்ந்த சுவிதா என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டார். சுவிதாவின் மாமனார் மாமியாருக்கும் சுவிதாவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது அதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டார். அதன் காரணமாக வழக்கு ஏற்பட்டு அதன் பேரில் சுவிதாவின் மாமனாரும் மாமியாரும் ஜெயிலில் இருந்தார்கள். சுவிதா எங்கள் சமூகத்தை சேர்ந்தவர் என்பதாகையால் அவரின் மாமனார் மாமியார்

ஜெயிலுக்கு சென்றதற்கு எனது மகன் அசோக்குமாரும் காரணம் என்று சதீஷும் அவரது தந்தையான ராஜாவும் அவரது சகோதரரான முத்துவும் கருதிக்கொண்டார்கள். அந்த ராஜா, முத்து மற்றும் சதீஷ் ஆகியோர் தான் ஆஜர் எதிரிகள். 12/12/2020 அன்று இரவு 08.30 மணியளவில் சதீஷ் எனது மகன் அசோக்குமாரை பேசுவதற்கு அழைத்ததன் பேரில் அசோக்குமார் எங்களது வீட்டிலிருந்து கிளம்பி சதீஷுடன் வெளியே சென்றுவிட்டார். அதன் பின்னர் இரவு 09.30 மணியளவில் மதகன் மகன் அசோகா என்பவர் எனது வீட்டிற்கு ஓடி வந்து, புதுசத்திரத்திலிருந்து பூந்தமல்லி செல்லும் சாலையில் அமைந்துள்ள புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்தில் எனது மகன் அசோக்குமாருக்கு காயங்கள் பட்டு இரத்தம் ெ காட்டுகிறது என்று கூறினார். உடனே நான் எனது மற்ற மகன்களான கார்த்திக் மற்றும் நவீன் ஆகியோர் அங்கு சென்று பார்த்தோம். அங்கு அசோக்குமார் இடது வயிற்றுக்கு மேல் பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட காயங்களோடு கிடந்தார். ( உடலின் அந்த பகுதியை சாட்சி சுட்டிக்காட்டி சொல்கிறார்). அவரசு உடம்பிலிருந்து இரத்தமாக போய் கொண்டிருந்தது. நான் எப்படி எனது மகனுக்கு அவ்வாறு ஏற்பட்டது என்று கத்தி கேட்ட போது அசோகா, எனது மகன் அசோக்குமாரை ராஜா, முத்து மற்றும் சதீஷ் ஆகியோர் கத்தியால் குத்திவிட்டதாக கூறினார். அதன் பின்னர் அசோக்குமாரை நாங்கள் திருவள்ளூர் அரசு பொது மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு எடுத்து ெ சன்றோம். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் அசோக்குமாரின் உயிர் பிரிந்துவிட்டதாக கூறினார்கள். அதன் பின்னர் வெள்ளவேடு காவல் நிலையத்திற்கு வந்து நான் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது புகார். (அது அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அதிலிருப்பது எனது கையொப்பம்.

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்புக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.பி.தயாளன் ஆஜராகி இருந்தும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாததினால் சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது).